1974 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்பும்—தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறத்தக்க அளவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், கண்கவர் காட்சிகள் நிறைந்த இடங்களையும், அழகு வாய்ந்த இடங்களையும் பார்ப்பதில் வெளிநாட்டவர்கள் நாட்டமுடையவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அவர்களைக் கவரத்தக்க—ஈர்க்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

புதைபொருள் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்க்க, வரலாற்றுத் துறையிலும் கல்வித் துறையிலும் ஆர்வமுள்ள ஒரு சிலர்தான் விரும்புவார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், அழகு மிக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளுக்கு வெளிநாட்டவரை ஈர்க்கின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சுற்றுலாத் துறை அம்மாதிரியான இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

*595 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில் சுற்றுலா விடுதி ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

இராமேஸ்வரத்தில் ரூ. 6 லட்சம் செலவில் சுற்றுலா மாளிகை ஒன்று கட்டுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் திறந்து வைக்கப்படும். நிலம் அணுகு சாலை முதலியவற்றிற்கு மாநில அரசு வகை செய்துள்ளது. அணுகு சாலைக்காக ரூ. 1.72 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா விடுதியில் தற்போது எத்தனை அறைகள் கட்டப்பட்டுள்ளன ; என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா மாளிகை இரண்டு மாடி கட்டடத்தில் அமைந்திருக்கிறது. அடித்தளத்தில் குளியலறை 2, ஒருவர் தங்கும்

அறைகள் 7, ஓய்வறை ஒன்று, முன் கூடம் அத்துடன் கடை வசதிகளும் உள்ளன. முதல் மாடியில் குளியலறையுடன் தங்கும் அறைகள் 10, 15 பேர் தங்கக்கூடிய டார்மிட்டரி--துயிலிடம் ஒன்று ஆகியவை உள்ளன. கட்டட வேலை முடிவடைந்து உள்ளது; விரைவிலே திறக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற பல்வேறு திட்டங்களைப் பற்றி அரசாங்கம் கருத்துக் கொண்டிருக்கிறது என்பது அமைச்சரவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பயணிகளைக் கவருகின்ற வகையில் மட்டும் விடுதிகளைக் கட்டினால் லாபகரமாக இருக்காது. இங்கே இருக்கின்றவர்களுக்கும் சேர்த்து விடுதிகளைக் கட்டினால்தான் லாபகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி இராமேஸ்வரத்தில் உள்ள சுற்றுலா விடுதி பற்றியது. அதைப்பற்றிய கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : கேள்வி சுற்றுலா விடுதியைப்பற்றியது தானே. சுற்றுலா விடுதிகளை அமைக்கும்போது இங்கே இருக்கின்ற மக்களும் அதிக அளவில் பங்குகொள்கின்ற வகையில் இருந்தால்தான் இங்குள்ளவர்களும் பங்குகொள்ள முடியும்; வருவாய் அதிகமாகும். அதைப்பற்றி இந்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டும் அல்லாமல் உள்நாட்டுப் பயணிகளையும் ஈர்க்கின்ற வகையில் அமைக்க வேண்டுமென்பது தான் எண்ணம். மற்றவர்களை ஈர்க்கின்ற திட்டங்களுக்கு என்று மட்டும் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வாரியமும் பெரிய அளவில் பணத்தைச் செலவிட இயலாது. ஆனால் இங்குள்ளவர்கள் வசதிகளுக்கு ஏற்றவகையில் தங்கும் விடுதிகளைத் தனியார்கள் கட்டுகிறார்கள்; இப்போதும் தனியார் விடுதிகள் பல இருக்கின்றன. அதற்கு நாம் ஊக்கமளித்து வருகிறோம். குற்றாலம் டவுன்ஷிப்பின் மூலம் குறைந்த பணம் கொடுத்துத் தங்குவதற்கு ஏற்ற வகையில் தனித்தனிக் கூடங்களையும் கட்டடங்களையும் கட்டியிருக்கிறார்கள். அதைப்போல திருச்செந்தூரிலும் கட்டப் பட்டிருக்கிறது. மகாபலிபுரம், ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் வெளிநாட்டவர்களைக் கவரத்தக்க அளவில்

1974 மார்ச் 26]

6 இடங்களை சுற்றுலா வாரியம் அமைத்திருக்கிறது. இராமேஸ்வரம் தங்கும் விடுதியிலுள்ள அறைகளுக்கு வாடகை 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்ற அளவுக்குத்தான் வரும். எந்த ஓட்டல்களிலும் 15 ரூபாய், 20 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதைப்போன்ற மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் சுற்றுலா வாரியத்தின் சுற்றுலாப் பயணிகள் விடுதிகள் இருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் விடுதி சமுத்திரக் கரையை ஒட்டி இருக்கிறது. அங்கிருந்து சூரிய உதயத்தைப் பார்க்க வசதி இருக்கிறது. இதுவரையிலே ஜனங்கள் அங்கே நின்று சூரிய உதயத்தைப் பார்த்து வந்தார்கள். இனியும் அவர்கள் பார்ப்பதற்கு இடையூறு இல்லாமல், வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய நிலைமை தெரியவில்லை. தடங்கல் ஏற்படாமலிருக்க என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய முடியுமோ, அவைகளைச் செய்யலாம்.

ஓமலூர் மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு.

*611 வினா—**திரு. வீ. செல்லத்துரை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் மருத்துவ மனையில் "எக்ஸ்ரே" (X-ray) படங்கள் எடுக்கும் கருவி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

டாக்டர் ம. மோசஸ் : தலைவரவர்களே, இப்போது எக்ஸ்-ரே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளில் இந்த யூனிட் முழு நேரம் வேலை செய்யாமல் இருக்கிறது. எமர்ஜென்சி கேஸ்கள் வந்தால், உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து, சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. அப்போது இந்த யூனிட் இயங்கவில்லையானல் உடனடியாக சிகிச்சை செய்ய முடியாது. உதாரணமாக சென்னையில் ஒரு ஆஸ்பத்திரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு